

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள், 12ம் நாள் (26-06-2022) 13ம் பிறைநாள் வெளியீடு +94 21 221 2739


## மாணிக்கவாசகர் குருபூசை



ஆனித் திங்கள் 19ம் நாள் (யூலை 3), ஆனி மகம் விண்மீன் அன்று தென்னாட்டில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு குருபூசை விழா இடம்பெறும்.

# ஈழத் தமிழரின் கருவூலமாம் பாடல்பெற்ற திருக்கேதீச்சரத்தில்

# ஆனி 22ம் நாளன்று (யூலை 6) திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



சரியாக 19ம் ஆண்டுகளுக்குப் பின்னர், ஆர்கலி சூழ்தென்னிலங்கை வண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானாகிய, திருக்கேதீச்சரம் மேவிய கேதாரத்தாருக்கு, நற்செய்கை (சுபகிருது) ஆண்டு, ஆடவை நல்லோரை ஆனித்திங்கள் 22ம் நாள் (யூலை 6), வளர்பிறை எழுமைப் பிறை நாளும் (சப்தமி) உத்தர விண்மீனும் கூடிய தினத்தில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா செய்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

அந்த வகையில் கற்றளியாக புதுப்பொலிவுடன் எழுந்துள்ள திருக்கோயிலில், இறை மூர்த்திகளுக்கு நற்செய்கை ஆனித் திங்கள் 19ம் நாள் (யூலை 3) தொடக்கம் 21ம் நாள் (யூலை 5) மதியம் 12 மணிவரை எண்ணைக்காப்பு இடம்பெறும். தொடர்ந்து 22ம் நாள் (யூலை 6) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரையான நல்வேளையில் திருக்குட நன்னீராட்டு இடம்பெறும்.

இந்த அற்புத நன்னாளில் சிவனடியார்கள் அனைவரும் வினைகளைப் போக்கிட பாலாவியில் நீராடி, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்துகொண்டு, பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல் எழுந்தருளியுள்ள, உங்களை ஆட்கொள்ளும் தேவனாகிய திருக்கேதீச்சரநாதரின் திருவருளைப் பெற்று உய்க.

## தருமை ஆதீன கிளைமடம் திருக்கேதீச்சரத்தில் திறப்பு மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இலங்கை வருகை



சிவபூமியாம் இலங்கைத் திருநாட்டில் சைவம் தழைத்தோங்க வேண்டும் என்ற திருவருள் ஏற்பாட்டில், திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீன குருமுதல்வர் 27வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமச்சாரிய சுவாமிகளின் அருளாணையின் வண்ணம், தருமை ஆதீன திருச்சி மௌனமட மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இலங்கை வந்துள்ளார். திருநெல்வேலியைச் சார்ந்த சுவாமிகள் சைவத்தினை விஞ்ஞான விளக்கங்களுடன் புரியவைப்பதில் திறமையுடையவர். திருமுறைகளில் குறிப்பாக, திருமந்திரத்தில் மிகவும் புலமை கொண்டவர். சைவத்தில் ஆழ்ந்த அறிவை கொண்ட இவரின் வருகை நிச்சயம் இலங்கை மக்களுக்கு ஒரு கொடையாகும். இவர் கோயிலுக்கு பின்னால் உள்ள மடத்தில் தங்கியிருந்து தனது சிவப்பணிகளை செய்துவருகிறார்.

## ஓரியூர் அருள்மிகு மட்டுவார் குழலியம்மை உடனுறை அருள்மிகு சேயுமானார் திருக்கோயில் திருநெறி தீந்தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



தண்பாண்டி நாட்டில் பாடல்பெற்ற திருத்தலங்கள் பதினான்காகும். பாடல் பெற்ற திருக்கோயில்களான திருவாடானைக்கும் திருப்புனவாயிலுக்கும் இடையில் ஓரியூர் அமைந்துள்ளது. திருப்பெருந்துறையில் இறைவனிடம் ஞான உபதேசம் பெற்றபின் பல தலங்களையும் வழிபட்ட மாணிக்கவாசகர் ஓரியூர் சென்று அங்கிருந்த திருக்கோயில் இறைவனைக் கண்டு தொழுதார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கடவுள் முருகனுக்கு தமிழ்முறையில் அயர்லாந்தில் திருக்கோயில்









சைவத்தினையும், தமிழினையும் சென்ற இடமெல்லாம் சிறப்புறச் செய்யும் தமிழர் மரபு தொன்றுதொட்டு தமிழரின் உயரிய பண்பாக இருந்து வருகிறது. அதற்கேற்ப அயர்லாந்துத் தீவின் மத்தியில் அமைந்திருக்கும் அத்தலோன் மாநகரத்தில் தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானுக்கு திருக்கோயிலானது இறைவன் திருவருளால் அமையப்பெற்றுள்ளது.

நற்செய்கை ஆண்டு, வைகாசித் திங்கள் 26ம் நாள் (09-6-2022) வியாழன் அன்று, மாலை 17.00 மணி முதல் 19.00 மணி வரையான வேளையில் தெய்வ திருவுருவச் சிலைகள் திருநிலைப்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்களின் சிந்தையில் திருவருள் துணைநின்று இந்த உயரிய கைங்கரியத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

# தருமை ஆதீன திருச்சி மௌனமட மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகளை திருக்கேதீச்சரத்தில் தென்னாடு மடத்தினர் சந்தித்து ஆசி பெற்றபோது...





## ஓரியூர் அருள்மிகு மட்டுவார் குழலியம்மை உடனுறை அருள்மிகு சேயுமானார்...





(01ஆம் பக்கம் பார்க்க)

**“ஓரியூரில் உகந்து இனிது அருளிப்பாரிரும் பாலகன் ஆகிய பரிசும்”** என்று ஓரியூர் இறைவனைப் பாடியுள்ளார்.

மணிவாசகப் பெருமான் கூறிய இவ்வரலாற்றை பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடல் புராணத்தில் விருத்த குமாரமாலனான படலத்தில் விளக்கியுள்ளார். கௌரி என்ற சைவப்பெண் வைணவக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டாள். அங்கு அவள் கொடுமைப்படுத்தப்பட்டாள். ஒருநாள் வீட்டுக்கு வெளியே அவளை வைத்துப் பூட்டி விட்டு உறவினர் திருமணம் ஒன்றுக்குச் சென்று விட்டனர். சிவனடியாரைக் காணாத கண் குற்றம் உடையது எனக்கருதி வருந்தினாள் கௌரி. சிவனடியார்க்கு அன்பிலாத மனம் இரும்பு. அடியார்க்கு பணிசெய்யாத உடல் மரம் என நினைத்துத் தளர்ந்தாள்

சிவபெருமான் முதிய வேடம் கொண்டு பசியுடன் இருப்பவராய் அவள் வீட்டுக்கு வந்தார். பூட்டுத்தானே நெகிழ்ந்தது. கௌரி உணவு சமைத்து அவருக்குப் படைத்தாள். உணவினை உண்ட அவர் மன்மதனைப் போன்ற இளமை உடையவரானார். கௌரி உடல்வியர்த்து அஞ்சி ஒதுங்கினாள். அந்த நேரத்தில் திருமணத்திற்குச் சென்றிருந்த மாமி முதலியோர் வீட்டுக்கு வந்தனர். உடனே இளைஞனாக இருந்த இறைவன் சிறு குழந்தையாக மாறினார். கோபம் கொண்ட அக்குடும்பத்தினர் கௌரியையும் குழந்தையையும் வெளியே துரத்தினர். தாய் இல்லாத அப்பிள்ளையின் முகம் நோக்கிக் கௌரி மிக வருந்தினாள். சோமசுந்தரக் கடவுளை எண்ணித் துதித்தாள். அக்குழந்தை மறைந்து விடையின் மேல் இறைவன் தோன்றிக் கௌரிக்குச் சாரூப முத்தி கொடுத்து அருளிச் செய்தான்.

இத்தகு சிறப்புடைய ஓரியூரில் இருந்த இறைவன் திருக்கோயில், கால வெள்ளத்தால் முற்றும் அழிந்து போனது. திருக்கோயில் இருந்தற்கு அடையாளமாகச் சிவகங்கைத் தீர்த்தம் மட்டும் உள்ளது. பெங்களூர் ஆண்ட அரசு உழவாரத் திருக்கூட்டத்தினர் வழிபாட்டுக்காக 10 ஆண்டுகள் முன் ஓரியூர் வந்தனர். திருக்கோயில் இல்லாததை அறிந்து வருந்திச் சென்றனர்.

திருக்கூட்டத்து அடியவரான சைவத்திருமதி இலதா அம்மையார் அவர்களின் மனதில் இது பெரும் துயரத்தை ஏற்படுத்தியது. இறைவன் முதியவனாய், இளைஞனாய், குழந்தையாய், இருந்து திருவிளையாடல் செய்த மண்ணில், கிழவன் சேது பதியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் அந்நிய நாட்டு ஜான் தி பிரித்தோ செய்துவந்த மதமாற்றக் கொடுஞ்செயல்களைக் பொறுக்காமல் தண்டனை அளித்த வீரம் செறிந்த மறவர் மண்ணில் புதிய திருக்கோயில் ஒன்றை அமைத்தே தீருவேன் என்று அம்மையார் சபதம் செய்தார். பெங்களூர் புதிய விமான நிலையத்திற்கு அருகில் இருந்த தமது இடத்தை விற்றும், ஓய்வூதியப் பணத்தைக் கொண்டும் புதிய கற்றளி அமைக்க எண்ணினார். காரைக்காலம்மையார் அறக்கட்டளை அன்பர்கள் உதவியுடன் சேயுமானார் என்ற பெயரில் இறைவனுக்கும் மட்டுவார் குழலி என்ற பெயரில் அம்மைக்கும் தனித்தனிக் கோயில்கள் கற்கோயில்களாக அமைக்கப் பெற்றன. இறைவன் இறைவிக்குக் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், இறைவனுக்கு இரு நிலை விமானம், அம்மைக்கு ஒரு நிலை விமானம் என அமைந்த கவினுறு கற்றளி காண்போர் கண்களுக்கு விருந்தாகிறது. மேலும் விநாயகர், முருகப்பெருமான், இலிங்கோத்பவர், நான்முகன், கொற்றவை, நால்வர் திருமேனிகளும் அமைக்கப்பெற்றுள்ளன. சண்டீசப்பெருமானுக்குத் தனிக்கோயில் விமானத்துடன் அமைக்கப் பெற்றுள்ளது.

இத்திருக்கோயிலின் திருக்குடநன்னீராட்டு பெருவிழா 04.05.2022 புதன்கிழமையன்று திருநெறிய தெய்வத்தமிழ் முறைப்படி நான்குகால வேள்வியுடன் மிகச் சிறப்பாகச் செய்யப்பெற்றது. பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளை அன்பர்களும் பாவனி சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை அன்பர்களும் வேள்விப் பணி செய்தனர்.

**செய்தி தொகுப்பு : ஆதி. நீலமோகன், பெங்களூர்**




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# திருக்கேதீச்சரம் சொல்லும் செய்தி

கிறித்துவுக்குப் பின் 1545 இல் பாரிய கடல்கோள் ஒன்று சுனாமிப் பேரலைகளாகப் பொங்கி இலங்கைத்தீவின் பல பகுதிகளை விழுங்கி ஏப்பமிட்டது என்கிறது வரலாறு. அந்தக் கடல்கோளால் மன்னார் மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளும் கடல்சூழ்ந்து மூழ் கடிக்கப்பட்ட போதும், திருக்கேதீச்சர ஆலயப்பகுதி மட்டும் உயர்ந்து நின்று ஊரவரையும் காத்தது என்பார்கள். இயற்கை அழித்துவிடமுடியாத திருக்கேதீச்சர ஆலயத்தினுள், கி.பி.1585 இல் நுழைந்த போர்த்துக்கீசர் தம் மதவெறியாலும், சுதேச மக்களின் வழிபாட்டுக் கோலங் களையும் பண்பாட்டுச் சின்னங்களையும் அழித்து, அடிமை மனநிலையில் வைத்துக் கொள்வதற்காகவும், ஆலயத்தை சூறையாடி, அதன் மதிற் சுவர்களைப் பிரங்கி வைத்து தகர்த்து, அந்த கற்களை சுதேசிகளை வைத்தே காவச்செய்து மன்னார் கோட்டையும் அமைத்து கொடுங்கோல் செலுத்தலாயினர்.

கேது வணங்கிய திருத்தலம், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரப் பதிகங்களால் ஏற்றிப்போற்றிய சிவாலயம், சோழகக்காற்று போர்த்துக் கேயர்கள் மீது வாரியிறைத்த மண்ணால் மூடப்பட்டு, மணல் மேடாகி, காடு வளர்ந்து சுமார் முந்நூற்றுப் பதினெட்டு ஆண்டுகள் அதாவது கி.1903 ஆம் ஆண்டுவரை வழிபாடு அற்றுக் கிடந்தது எனலாம்! “படவேரிடை மடவாளொடு பாலவியின் கரைமேல் திடமாக உறைந்த” திருக்கேதீச்சரத்தான், தன்னுருக் காட்டாமல் மூன்று நூற்றாண்டுகள் மறைந்து கொண்டார்

சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் தேவாரத் திருப்பதிகங்களை ஆராய்ந்து, ஓதி உணர்ந்து, திருக்கேதீச்சரத்தின் மாண்பையும், அது மீண்டும் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை யும் மூன்று நூற்றாண்டுகளுக்கு பின்னர், மக்களின் மனங்களிலும் சைவப்பெரிய வர்களின் உள்ளங்களிலும் மீண்டும் பதிய வைத்தவர்! ஒற்றுமையோடு சிறுகச் சிறுகச் பணம் சேர்த்தால் மாதோட்டத்தை மீட்டு சைவம் தளைத்தோங்க வைக்க காரியம் புரியலாம் என்று அவர் விடுத்த அறைகூவலின் எதிரொலி தான், நாட்டுக்கோட்டை நகரத்தாரும், வண்ணார் பண்ணை வேலுப்பிள்ளை உடையாரும், பசுபதிச் செட்டியாரும், சிவபாத சுந்தரனாரும், செல்லப்பா சுவாமியாரும், சரவணமுத்து சுவாமியாரும், இன்னும் பல சைவப் பெரியார்களும் இணைந்து திருப்பணி செய்யக் காரணமானதை நன்றியோடு நினைத்துக்கொள்வோம்.

சேர். வில்லியம் துவைனம் என்கிற வடபுல ஆள்பதியால் மண்மேடு சூழ்ந்த திருக் கேதீச்சர ஆலய சூழல் சுமார் 43 ஏக்கர் நிலம் ஏலத்தில் விடப்படுகிறது. போதிய பணம் இல்லாமையால் ஏலம் ஒத்திவைக்கப்பட்டதும் அதற்கு கிறித்தவ பாதிரிமார் சம்மதித்ததும் இறைவன் தன் திருவுளமே அன்றி வேறில்லை! இந்த பெரும் போராட்டத்தின் பயனாக சைவத்தமிழர் இதயங்களிலும், மாதோட்டத்திலும் எழுந்து நின்ற திருக்கேதீச்சரம், இன்று மீண்டும் சைவப் பெரியவர்களளின் விடமுயற்சியால், இந்திய அரசின் முந்நூறு மில்லியன் ரூபாய் நிதியுதவியுடனும் காலத்தால் அழியாத கருங்கற்கோயிலாக எதிர்வரும் யூலை 06 ஆம் நாள் திருக்குடமுழுக்கு காண இருக்கின்றது!

இந்த நீண்டவரலாற்றில், மீள் எழுச்சியும், தொடர்ந்தும் பிற மத ஆதிக்கங்களோடு போராடி வெற்றிகொண்ட மேன்மையும் நாம் சிந்திக்கின்ற போது, திருக்கேதீச்சரம் எமக்கு ஒரு செய்தியை சொல்லிநிற்கின்றது. அல்லது, திருக்கேதீச்சரம் வாயிலாக இறைவன் எமக்கு ஒரு பெரும் செய்தியை உணர்த்துகின்றார் என்றும் சொல்லலாம். அதாவது சுந்தரர் பாடிய போது, திருக்கேதீச்சர ஆலயம் இப்போது உள்ள ஆலயத்தைக் காட்டிலும் அளவில் பெரிதாக இருந்திருக்க வேண்டும். பழைய சேதமான சிவலிங்கத் திருமேனியின் அளவைக் கொண்டே நாம் அதனை ஊகித்து அறியலாம். எனவே அவ்வாலயத்தில் இறைவன் திடமா உறைந்திருந்தார். இதனால் தான் சுந்தரர் “திடமாக உறைகின்றான்” என்று தன் பதிகத்தில் பாடியருளினார். ஆனால் போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பால் அந்த இருப்பு மண் மேடாகியது. ஆனாலும் இறைவன், ஞானசம்பந்தரும், சுந்தரரும் அப்பர் சுவாமிகளும் பாடிய தேவாரங்களில் திடமாக இருந்தார்! அந்த தேவாரங்கள் தில்லையிலே செல்லரித்துப் போகாமலும் திடமாக இருந்தன! காலம் தன் கைகளில் அதைக் திடமாகச் சுமந்து வந்து சீர்வளர்சீர் ஆறுமுகநாவலரிடத்திலே கொடுத்தது! அந்த தவப்பேறே இன்று ஆலயம் மீண்டும் எழுந்து நிற்பதற்கு துணையாயிற்று!

எனவே, பத்தி இலக்கியங்கள் இன்னும் எழவேண்டும் என்பதும், பாடப்பெற்ற பாடல்கள் ஆய்வு நோக்கத்தோடும் அருள் நோக்கத்தோடும் பார்க்கப்பட வேண்டும் என்பதையும் திருக்கேதீச்சரம் எமக்கு செய்தியாக சொல்லி நிற்கின்றது! இளைய படைப்பாளிகளும், இந்த வரலாற்றை எதிர்காலத் தலைமுறையினருக்கு கடத்தும் ஆற்றலாளர்களும் இன்னும் இன்னும் முகிழ்த்து வரவேண்டி இறைவனைப் பணிவோம்!

**“புத்தராய்ச் சில புனைதுகிலுடையார் புறனுரைச் சமணாதர்**
**ஏத்தராகிய நின்றுண்பவரியம்பிய ஏழமை கேளேன்மின்!”**

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# நான் உம்மை வணங்கியன்றிப் போகேன்

மனிதனின் சிறப்பாற்றலே அவனுடைய மனம் தான். மனதிலே உறுதி பூண்டு, இலக்கினைத் தைரியமாக நோக்கும் போது வெற்றி எனும் கனி கனிகிறது. இறைவன் விரும்புவது கூட எம்முடைய மனதினைத் தான். “வெள்ளை நிற மல்லிகையோ? வேறெந்த மாமலரோ? வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ? வெள்ளை நிற மல்லிகையுமல்ல, வேறெந்த மலருமல்ல, உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்று சுவாமி விபுலானந்தர் பாடிய செய்யுளின் மையக் கருத்தும் மனமே.

எவன் ஒருவன் தனது மனதை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கின்றானோ, அவனே முத்தியெனும் பரீட்சையின் வெற்றியாளன் ஆகின்றான். கண்ணப்ப நாயனார் தன் கண்ணைப் பிடுங்கி எடுக்கும் போது வலிக்குமே என்று மனதால் பயந்து இருந்தால், இன்று அவர் நாயனாராகவே இருந்திருக்க மாட்டார். யோசித்துப் பாருங்கள், எல்லா அன்பிலும் மனதின் பலமே வெற்றிக்கு வழியாகிறது. ஒருவனிடம் எத்தனை பலமும் இருக்கலாம், ஆனால் அவனிடம் மனபலம் இல்லாவிடின் மற்றைய பலங்கள் எல்லாம் காணாமலே போய் விடும். ஆனால் மனபலம் மட்டுமே உள்ள ஒருவன் வேறெந்த துணை இன்றியும் வெற்றி பெறுவான்.

**“வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற” என்பது வள்ளுவன் வாக்கு”**

எண்ணங்களின் சக்தி பற்றித் தற்கால உலகு பல்வேறு விதமாகப் பேசுகின்றது. பிரபஞ்ச ஈர்ப்பு விதி என்ற பெயரில் கூட இதனை உளவியல் அறிஞர்கள் அழைக்கின்றார்கள். சைவசித்தாந்தம் கூட இதனை அண்மித்த பொருண்மையில் தான் இறை அருளைப் பேசுகின்றது. பெரிய புராணத்திலே ஒரு அற்புதமான நிகழ்வைச் சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுவார்.

ஒரு முறை திருநாவுக்கரசர் திருப்பழையாற்றை நோக்கிச் செல்கின்றார். அங்கே இருந்த வடதளிக் கோயிலை சமணர்கள் மூடி மறைத்து அழித்து விடுகின்றனர். அழித்த பின் அவ்விடத்தே சமணப் பள்ளியை நிறுவுகின்றனர். அந்த வழியே வந்த நாவுக்கரசர் இந்தச் செய்தியைக் கேட்டு துடிதுடித்துப் போகின்றார். என்ன செய்ய முடியும் அவரால்? படைபலமோ, ஆயுதப்பலமோ, மக்கள் பலமோ ஏதுமற்றுத் தனி ஆளாக நின்று அழுதார். இதனைச் சேக்கிழார்,

**“மந்த அமணர் வஞ்சனையால்**
**மறைந்த வஞ்சம் ஒளிந்தருளிப்**
**பந்தம் கொண்ட குண்டர் திறம்**
**பாற்றும் என்று பணிந்திருந்தார்” என்று பாடுகின்றார்.**

அழுது விட்டுப் போயிருந்தால் அது சாதாரண கதையாகப் போயிருக்கும். ஆனால் நாவுக்கரசர் அவ்வாறு செய்யவில்லை. “நான் உன் திருமேனியைக் கண்டு வணங்காமல் இவ்விடம் விட்டு அகலவும் மாட்டேன், உணவு உண்ணவும் மாட்டேன்” என்று அமர்ந்து விடுகின்றார். இந்தக் கால முறையில் சொல்லப் போனால் உண்ணாவிரதப் போராட்டம் செய்கின்றார்.

அவரின் தூய மனத்திட்பம் இறைவனை அசைக்கிறது. இறைவன் மன்னனின் கனவில் சென்று அக்கோயிலை மீட்க உத்தரவிடுகின்றான். இறைவனின் உத்தரவிற்குப் பணிந்து சமணப் பள்ளியை மீண்டும் சைவக் கோயிலாக மாற்றுகின்றான் மன்னன். இந்தக் கதையின் அடி ஆழச் செய்தி மனத்திட்பம் தான். எமக்கு எதுவுமே இல்லை, யாரும் இல்லை என்று எல்லாவற்றையும் மறந்து கடந்து செல்வதைக் காட்டிலும், உண்மையான மனத்திட்பத்துடன் போராடுவது மேன்மையானது. இது வாழ்வின் எல்லாவிதப் படிநிலைகளிலும் துணை போகும். இறை பத்தியில் மட்டுமல்ல, காதலில், நட்பில், தொழிலில், உறவுகளில், பரீட்சைகளில் என எல்லாவற்றிலும் துணை போகும்.

அதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான். அது எம் மனதை தைரியப்படுத்தல் மற்றும் திடப்படுத்தல். ஒருவருடைய மனத்திட்பமே இவ்வளவு ஆற்றல் மிக்கதாக விளங்கும் போது, ஒவ்வொருவருடைய மனத்திட்பமும் சேர்ந்தால் எந்தவிதமான இலக்குகளும் இலகுவில் வெற்றிகொள்ளப்படும். நாவுக்கு அரசரின் மனத்திட்பத்தை சேக்கிழார் பாடிப் போகும் பாடல் இது தான்.

**“வண்ணங்கண்டு நான் உம்மை**
**வணங்கியன்றிப் போகேன் என்**
**எண்ணம் முடிக்கும் வாகீசர்**
**இருந்தார் அமுது செய்யாதே**
**அண்ண லரும் அது உணர்ந்தங்கு**
**அரசு தம்மைப் பணிவதற்குத்**
**திண்ணமாக மன்னனுக்குக்**
**கனவில் அருளிச் செய்கின்றார்”**

நாமும் எம் மனதைத் திடப்படுத்தி முயலுவோம், வேண்டியது கிட்டும். இதற்கு அப்பரே சான்று, சேக்கிழாரே சாட்சி.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## திருக்கேதீச்சரம் - அருள்மிகு கௌரியம்மை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற ஈழவளநாட்டில் சைவசமயத்தின் பழமைக்கும் சிறப்பிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்த ஐம்பெரும் ஈச்சரங்களில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டும் மிகப்புராதனமானதும், நாயன்மார்களினால் சிறப்பித்துப் பாடப் பெற்ற திருத்தலமாகவும் விளங்குகின்றன. அது மட்டுமன்றி தமிழகத்துச் சைவர்களும் அறிந்து போற்றுகின்ற சிறப்பினையும் பெற்றிருக்கின்றன. இவ் இரு தலங்கள் பற்றிய புராதன மரபுகளும் தமிழக புராண இதிகாசக் கதை இலக்கியங்களிலும் பத்திப்பாடல்களிலும் பரவி வந்துள்ளன. இச்சந்தர்ப்பத்தில் ஈழவளப்பூமியில் சிவனைத் தேடி அறியும் தென்னாடுத் திங்கள் பத்தி இதழினூடாக, திருக்குட நன்னீராட்டுவிழா காண இருக்கும் திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் வரலாறு பற்றிக் கட்டுரையாக்க சித்தங்கொண்ட கேதீச்சரப்பெருமானின் திருவடிகளுக்கு முதல் வணக்கம்.

### திருக்கோயில் அமைவிடமும் மாதோட்டச் சிறப்பும்

இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்று அழைக்கப்படுகின்ற மாதோட்டம் என்ற இடத்தில் இப்பழம் பெரும் சிவாலயம் அமைந்துள்ளது. புராதன காலத்திலே திருக்கேதீச்சரம், 'மகாதுவட்டாபுரம்' என அழைக்கப்பட்ட தாகவும் அப் பெயரே பின்னதாக மாதோட்டம், மாந்தோட்டை, மாந்தை என மருவிவந்துள்ளதாகவும் ஒருசாரார் கூறுவர். இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த பட்டணகாம, மஹா தித்தபட்டன, மாவுடு எனவும் பேசப்பட்டு வந்துள்ளது. நாயன்மார்களின் பத்திப்பதிகங்களில் மாதோட்டம், மாதோட்டநன்நகர் என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

புராதன காலம் முதலாக மாதோட்டம் இலங்கையின் பிரதான துறைமுகப்பட்டினமாக விளங்கியுள்ளது. இவ்விடத்தில் மல்வத்து ஓயா எனும் ஆறும் கடலும் கலக்கும் பகுதியாக இருப்பதனால் சங்கும் முத்தும் மிகுதியாக மன்னார் கடலில் விளைந்தன. அவை பெறுமதி மிக்கவையாகவும் இருந்ததோடு, ஆபரணங்களுக்காகவும் உபயோகிக்கப்பட்டன. அவை கடல் கடந்த வாணிபப் பொருளாகவும் மதிக்கப் பட்டன. இவ்வாறு மாதோட்டம் ஒரு கரையோரப்பட்டினம் என்ற வகையில் தேவாரம் பாடிய தேவார முதலிகள் காலத்தில், செல்வம் மிகுந்த சிறந்த வணிக நகராக விளங்கியுள்ளதை கீழ்வரும் அவர்களின் பதிக அடியில் வாயிலாக அறிய முடிகிறது.

**"பொன்னிலங்கிய முத்து மா மணிகளும்
பொருந்திய மாதோட்டம்." - (சம்பந்தர் தேவாரம்)**

**"வங்கம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்நகர்,
வையம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்நகர்,
வானத்துறு மலியுங் கடல் மாதோட்ட நன்நகர்" - (சுந்தரர் தேவாரம்)**

அது மட்டுமன்றி நீர்வளத்தாலும் நில வளத்தாலும் மிகச் செழித்து பொழில் பூத்த பதியாகவும் மாதோட்டம் விளங்கியது. மா, வாழை, தென்னை, கமுகு போன்ற பயன்தரும் மரங்கள் சோலைகளாக காட்சியளித்தன. மற்றும் நறு மணம் வீசும் மலர்ச் செடிகள் நிறைந்த சோலைகளும் பூத்துக்குலுங்கின. மலர்களில் நிறைந்திருந்த தேனினை அள்ளிப்பருக வண்டுகள் யாழிசைபோல இரீங்காரம் இசைத்தன. இதனைச் சுந்தரர் பெருமான் தமது தேவாரத்தில் "வரிய சிறை வண்டு யாழ் செயும்", "சிறையார் பொழில் வண்டியாழ் செயும்" என்று பாட, சம்பந்தர் பெருமான் "வண்டு பண் செயு மாமலரப் பொழில்" என்று பாடுகின்றார். மற்றும் பயன்தரு மரங்களிலே தாவித்திரியும் வானரங்கள் கனிகளைப் பறிக்குங் காட்சியும் கதிரவனின் கதிர்களால் உண்டான வெப்பத்தைத் தணித்துக் கொள்ள மயில்கள் சோலைகளில் புகுந்து தோகை விரித்து ஆடும் காட்சியும் தினமும் நடைபெறும். திருமருவிய பதி மாதோட்ட நன்நகர் என்பதை "வாழையம் பொழின் மந்திகள்
களிப்புற மருவிய மாதோட்டம்", "மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடும் மாதோட்டம்" சம்பந்தரும் "மா வின் கனி தூங்கும் பொழின் மாதோட்ட நன்னகர்" என்று சுந்தரரும் சிறப்பித்துப்பாடுகின்றனர்

### மரபுகளும் நம்பிக்கைகளும்

ஈழத்து சைவத்திருக்கோயில்களில் திருக்கோணேச்சரமும், திருக்கேதீச்சரமும் மிகவும் பழமையானது. இவற்றின் பழமை சரித்திரத்திற்கோ, அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாத புகழ் வாய்ந்தது. இந்திய புராண இதிகாசக் கதைகளினால் ஒருவாறு ஊகிக்கத்தக்கது.

வாயுபுராணக்கதைப்படி ஒரு கற்பகத்தின் மேரு மலையின் மூன்று சிகரங்கள், தென்கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம் இந்திரன் ஆணையால் விசுவகன்மாவால் அலங்காபுரியாக அமைக்கப்பட்டது. மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவன் கோயிலையும் அமைத்தான். அந்நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைந்த சிவாலயம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது. இத்தலத்தை தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், அடியார்கள் என பலரும் பூசித்து வரம் பெற்றதாக சரித்திரங்களும் கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு.

கேது என்பவன் அசுரர்களில் வலிமை படைத்தவன். அசுரர் கூட்டத்தோடு சேர்ந்திருந்தமையால் அகங்காரம் உற்று பின், தன் பிழை உணர்ந்து தன் உள்ளத்தில் மாதோட்டப் பெருமானை இடைவிடாது தியானித்து அருள் பெற்றார். அதனால் மாதோட்ட இறைவன் கேதீச்சரநாதர் என்றும் தலம் கேதீச்சரம் என்று அழைக்கப்படுவதாயிற்று என்பர். மற்றும் கேது பகவான் கேதீச்சர இறைவன் மீது "கேதீஸ்வர அஷ்டகம்" பாடித்து திருவருள் பெற்றாராம். என்றும் கதையுண்டு.

மயனின் மகளும் இராவணனின் தாரமுமாகிய மண்டோதரி இத்தலத்தை வழிபட்டாள் என்றும் இராமன், இராவணன் பூசித்த தலம் என்றும் கூறப்படுகின்றது. தட்சிண



கைலாச புராணம், தீர்த்த யாத்திரை சென்ற அருச்சுனனும் இத்தலத்தை போற்றினான் என்று கூறுகின்றது. அகத்திய முனிவரும் "கேதீச்வர தசகம்" எனப்படும் துதி பாடி கேதீச்சரப் பெருமானின் திருவருள் பெற்றார் என்றும் கூறப்படுகின்றது.

விசயனுடன் இலங்கைக்கு வருகை தந்த உபத்திஸ்ஸன் என்னும் பிராமணன் திருக்கேதீச்சரத்தில் பூசை செய்தார் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இலங்கையின் பழமைக் குடிகளில் ஒருவரான நாகவம்சத்தினரும் இத்தலத்தை போற்றியுள்ளனர். இதனால் "நாகநாதர்" என்றொரு பெயர் திருக்கேதீச்சரப் பெருமானுக்கு இன்னமும் வழங்கப்பட்டு வருகின்றது. கி.பி 4 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட சிறீமேக வண்ணன் என்னும் சிங்கள மன்னன் காலத்தில் மாதோட்டத்தில் சைவக்கோயில்கள் இருந்தமை பற்றி தாதுவம்சம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

### திருத்தல வரலாறு

தென்னிந்திய சிவன் கோயில்களுக்கு இணையான பழமையையும், மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களையும், நாயன்மார்களினால் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகவும் ஈழத்து சிவபூமியில் சீரும் சிறப்பும் பெற்றதாக திருக்கேதீச்சரம் விளங்குகின்றது.

இலங்கையில் தோன்றிய பல வரலாற்று நூல்களில் இத்தலத்தின் வரலாறு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ மேகவண்ணன்(கி.பி 303-331) காலத்திலே திருக்கேதீச்சரம் அழகிய கோயிலாக இருந்தது என்று தடாவம்சம் கூறுகின்றது. வெகு காலத்திக்கு முன்பே இக்கோயில் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ணபரம்பரைக் கதையும் உண்டு. அதற்கேற்றால் போல் திருஞானசம்பந்த பிள்ளையும் திருக்கேதீச்சரமும் காடாகவே இருந்திருக்கின்றது என்பதை "கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம்" என்ற தேவாரப்பாடலடியால் உணர்தியுள்ளார்.

(05ஆம் பக்கம் பார்க்க)



# சிவபூமியில் சிவனைத் தேடி...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தராலும் 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாராலும் திருக்கேதீச்சரம் பற்றி தனித்தனியே பதிகங்கள் பாடியுள்ளதிலும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற திருவீழிமிழலைப் பதிகத்தில் "கேதீச்சர மேவினார் கேதாரத்தார்" என்ற பதிகத்தில் திருக்கேதீச்சரப் பெருமானை உச்சரித்து இருப்பதிலும் பல்லவ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் நிலைபெற்றிருந்த பழமையும் சிறப்பும் பெற்ற சிவன் கோயில் என்பது உண்மைப் படுத்தப்படுகின்றது. "Epigraphia Zeylonica, vol .111" எனும் நூலின் பக்கம் 132 முதல் 225 வரை அநுராபுரத்திலும், தென்கோடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் திருக்கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும் சிறப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரக் கல்வெட்டில் ஜேதவன தூபிக்கு வழங்கப்பட்டுள்ள தானம் ஒன்றினை மீறியவர்கள் மஹாவுது (மஹாதீர்த்தம்) எனுமிடத்தில் ஆட்டினை கொன்ற பாவங்களை அடைவர் என்றும், கதிர்காமக் கல்வெட்டில் குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் மஹா தொடியிலே (மகாதீர்த்தத்தில்) பசுக்களை கொன்றோரது பாவங்களை எய்துவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு கல்வெட்டுக் குறிப்புக்களின் படி கி.பி 10 ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம் புகழ் பெற்ற இடமாக விளங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. கி.பி 10 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறில் இலங்கையில் சோழரின் ஆதிக்கம் நிலைபெற்ற போது "மகாதேவன் கோயில்" என்று திருக்கேதீச்சரம் அழைக்கப்பட்டுள்ளது.

இராசேந்திர சோழனினால் திருத்தங்கள் செய்யப்பட்டு, கோயிலிற் சந்தி விளக்கு எரிவதற்கு மூன்று வணிக



கணங்களுக்கு காசு கொடுத்த செய்தியும், சோழப்பிரதானியான சிறு கூற்ற நல்லூர் கிழவன் தாழிகுமரன் மாதோட்டத்தில் இருந்த கோயிலொன்றுக்கு "வைகாசி விசாசம் ஏழு நாளும் விழா எடுத்துத் தீர்த்தம் ஆட்டுவிக்க வேண்டும்" என்ற அறக்கட்டளைச் செய்தியும் சாசனத்தில் கூறப்படுவதால் மாதோட்டச் சிவாலயமாக திருக்கேதீச்சரம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. மற்றும் சோழர் காலத்தில் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப்பெற்ற சைவக் காப்பியமான பெரியபுராணத்திலும் திருக்கேதீச்சரத்தினை பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

**"சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்**
**திருக்கேதீச்சரத் தண்ணல் செய்ய பாதம்."**

கி.பி 13 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாம் பாண்டிய பேரரசின் ஆதிக்கத்தின் விளைவாக திருக்கேதீச்சரம் சைவரான பாண்டிய பெருமன்னரின் ஆதரவினைப் பெற்றிருந்தது. முதலாம் சுந்தர பாண்டியன் காலத்துச் சிதபம்பர கல்வெட்டொன்றிலே திருக்கேதீச்சரம் பற்றிய குறிப்புள்ளது.

கி.பி 16 ஆம் நூற்றாண்டில் மன்னார் பகுதி போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது. அப்போது அவர்களால் இப்பண்டையத் திருக்கோயில் இடித்து





அழிக்கப்பட்டது. இராலி விசுவநாத சாத்திரியரின் சம்பவக் குறிப்பிலே திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதியினை 1540 இல் கடல் காவு கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 200 ஆண்டுகள் கழிந்த பின் 1894 ஆம் ஆண்டு பண்டைக் கோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான அகழ்வு ஆராய்ச்சி ஆரம்பமாகி அதன் விளைவாக பழைய ஆலயமும் கண்டுபிடிக்கப்பட்டது. சோமக்கந்தர் வடிவமும் கண்டு பிடிக்கப்பட்டது.

1872 இல் நாவலர் பெருமான் யாழ்பாணச் சமயநிலையில் "திருக்கேதீச்சரம் எனுந் தேன் பொந்து ஒன்று உள்ளது அங்கு மருந்தொன்று மறைந்துள்ளது அதனைச் சென்றடையுங்கள்" என யாழ்ப்பாணச் சைவ மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணினார். இதன் பின்னர் 1903 இல் புதிய கற்கோயில் உருவாக்கப்பட்டு, பல குட நன்னீராட்டு விழாக்களையும் கண்டு வந்துள்ளது.

### மூர்த்தியின் கீர்த்தி

இத்தலத்தில் உள்ள இறைவனின் பெயர் திருக்கேதீச்சர நாதன் இறைவியின் பெயர் கௌரிஅம்மை. கோயில் மரம் (தலவிருட்சம்) வன்னிமரமாகும், "மூவெயில் சென்றவன் பற்றி நின்றுறைபதி", "அண்ணல் நண்ணு கேதீச்சரம்", "காதலித் துறை கோயில்" "மாதோட்ட நகர் மன்னித் தேவி தன்னொடும் இருந்த வெம் பெருமான்" என்னும் சம்பந்த பெருமானது தேவார அடிகள், இறைவன் தனது இறைவியோடு மாதோட்ட நன்னகரில் அடியார்களுக்கு அருள் சொரிந்து ஆன்ம ஈடேற்றம் கொடுப்பதற்காக இவ்விடத்தை விட்டு நீங்காமல் உறைகின்றார் என்ற சிறப்பை உணர்த்திக் காட்டுகின்றார். அவ்வாறே சுந்தரரது பதிகத்திலும் "பாலாவியின் கரைமேல் திடமாவுறைகின்றான்" என்று மூர்த்தியின் அருட்கொடை சிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தர் பெருமான் திருக்கேதீச்சரப் பெருமானை தம் பதிகத்தில் மாதோட்டத்து அண்ணல், அடிகள், என்றிவ்வாறு போற்ற சுந்தரர் "மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி" என்றும், அட்டன்(அட்டமூர்த்தி), சிரேட்டன்(மேலானவன்), என்ற பெயர்களாலும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

### திருத்தலச் சிறப்பு

இத்தலத்தின் சிறப்பைப் புரிந்து கொண்டு சம்பந்தர் பெருமானும், சுந்தரர் பெருமானும், இராமேசுவரத்தில் இருந்தபடி மனதோற்றத்திலேயே, மாதோட்டத்தையும் அதில் உறையும் பெருமானையும், பாலாவி தீர்த்த மகிமையையும் தனித்தனி பதிகங்களில் பாடிப்பரவியுள்ளனர். இதனால் நாயன்மார்களினால் பாடல் பெற்ற தலமாக புகழடைந்தது. அப்பர், மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்றோரும் இத்தலத்தின் பெயரை தங்களது பதிகங்களில் உச்சரித்துப் போற்றியுள்ளனர்

இத்தலத்தை கேது வணங்கியமையால் "கேதீச்சரம்" என்றும், நாகர் போற்றியமையால் "நாகநாதர் கோயில்" என்றும், புராதன காலத்தில் "மகாதுவட்டபுரம்" எனவும்,



சோழர்காலத்தில் "இராசராசேசுவரம்" எனவும் பெயர் சூட்டபட்டுள்ளது.

### தீர்த்தச்சிறப்பு

இத்தலத்தின் தீர்த்தம் பாலாவி என்று அழைக்கப்படும். இத் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோர்க்குக் காயாவில் கடனாற்றும் புண்ணியம் கிட்டும் என்றும், மற்றும் பிரமகத்தி பாவம் கிரகபீடைகள், வினைகள் என்பவற்றை போக்கும் மகிமை பெற்றது என்றும் நாயன்மார்களின் பதிக வாயிலாக அறிய முடிகிறது.

சம்பந்தர் ஒரு பாடலில் மட்டும் இத்தீர்த்தத்தின் மகிமையை "தத்தர் மன்னு பாலாவியின் கரையிற் கேதீச்சர மடை மின்னே" என்று ஒத, சுந்தரர் பல இடங்களில் இத் தீர்த்ததின் மகிமையும் புகழையும் ஓதியுள்ளார்.

**"பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரை"**
**"பரிய திரை எறிய வரு பாலாவியின் கரை"**
**"பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரை"**

### பூசைகளும் விழாக்களும்

வருடந்தோறும் வைகாசித் திங்கள் முறம் (விசாகம்) நாண்மீன் நன்னாளில், பத்தாம் நாள் தீர்த்தத் திருவிழாவுடன் வருடாந்த பெருந்திருவிழா நடைபெறும். இவ்வாலயத்தில் பெரும் சிவன் இரவு சிறப்பாக நடைபெறும். நாட்டில் உள்ள சகல பாகங்களிலிருந்தும் சிவ அடியார்கள் இங்கு வந்து இவ்விரதத்தை அனுட்டிப்பது சிறப்பாகும். தைப்பூசம், பங்குனி உத்தரம், மார்கழித் திருவாதிரை, திருவெம்பாவை பாடுதல் உட்பட சகல விரத வழிபாடுகளும், விழாக்களும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ஆறுகால, தினப்பூசைகள் இடம் பெற்றும் வருகின்றன.

### திருத்தலமகிமை பற்றிக் கூறும் நூல்கள்

திருக்கேதீச்சர தல வரலாறு பற்றிக் கூறும் பழம் பெரும் நூல்கள் அழிந்துவிட்டன. தற்போது எஞ்சியவற்றுள் தட்சணைகைலாய மகாத்மியம், மாந்தை பள்ளு, சம்பந்தர், சுந்தரர் போன்ற சமய குரவர்கள் பாடிய திருக்கேதீச்சரத் திருப்பதிகம் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றை விட பிற்காலத்திலும் இவ்வாலயம் தொடர்பாக பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம் (1949), திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடு தூது (1963), திருக்கேதீச்சர நாதர் ஊஞ்சல் (1966), திருக்கேதீச்சர புராணம் (1970), திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைதமிழ் (1976), என்பனவும் குறிப்பிடத்தக்கவை.

### திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபை

1890 இல் திருக்கேதீச்சர தலத்தை நிர்வாகம் செய்ய பல சைவப் பெரியோர்கள் முன் நின்று பாடுபட்டார்கள். அவர்களுள் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் தலைமையில் திருபணிச்சபை உருவாக்கப்பட்டு, திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டு கருங்கற் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருக்கேதீச்சரம் கருங்கற் கோயிலாக்கப்பட்டு பூசைகள், உற்சவங்கள் நடைபெற்று வந்துள்ளது. இன்று திருக்கேதீச்சர யாத்திரை செய்வோர் தங்குவதற்குரிய திருமடங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. மற்று கோ இல்லம், அன்னதான மடம், நூல் நிலையம், சைவப்பாடசாலை, மருத்துவமனை, என பல சமயம் சார்ந்த சமூகப்பணிகளையும் புரிந்து வருகின்றன. தற்போது மன்னார் மாவட்டத்தின் சைவசமய முன்னேற்றத்திற்காக பாடுபட்டுவரும் சபையாகவும் விளங்கி வருகின்றது.

**"சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்**
**திருக்கேதீச்சரத்து அண்ணல் செய்ய பாதம்**
**உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்**
**உலவாத கழி பெற்றார் உவகை உற்றார்"**

**திருச்சிற்றம்பலம்**

# திருப்பணிக்கு முன்னரான திருக்கேதீச்சர நிழற்படங்கள்













# இந்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் கற்றளிக் கோயிலாகத் திருக்கேதீச்சரம்




















# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம்



| | |
|---|---|
| இறைவன் திருப்பெயர் | - திருக்கேதீச்சரநாதர், மாதேவன் |
| இறைவியார் திருப்பெயர் | - கௌரியம்மை |
| பண் | - நட்டபாடை |
| திருமுறை | - 7ம் திருமுறை |

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம் மத யானை உரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு, பாலாவியின் கரைமேல்,
செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சரத்தானே.

சுடுவார் பொடி நீறும், நல துண்டப் பிறை, கீளும்,
கடம் ஆர் களியானை உரி, அணிந்த கறைக் கண்டன்
படவேரிடை மடவாள்ஒடு பாலாவியின் கரை மேல்
திடமா உறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே.

அங்கம் மொழி அன்னார் அவர், அமரர், தொழுது ஏத்த,
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கம் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் அரவு அசைத்தான் திருக்கேதீச்சரத்தானே.

கரியக் கறைக்கண்டன், நல கண்மேல் ஒரு கண்ணான்,
வரிய சிறை வண்டு யாழ்செயும் மாதோட்ட நன் நகருள்
பரிய திரை எறியா வரு பாலாவியின் கரைமேல்
தெரியும் மறை வல்லான் திருக்கேதீச்சரத்தானே.

அங்கத்து உறு நோய்கள் அடியார் மேல் ஒழித்து அருளி,
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கம் செய்த மடவாள் ஒடு பாலாவியின் கரைமேல்
தெங்கு அம்பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

வெய்ய வினை ஆய அடியார்மேல் ஒழித்து அருளி,
வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பையேரிடை மடவாள் ஒடு பாலாவியின் கரைமேல்
செய்ய சடை முடியான் திருக்கேதீச்சரத்தானே.

ஊனத்து உறு நோய்கள் அடியார் மேல் ஒழித்து அருளி,
வானத்துறு உறு மலியும் கடல் மாதோட்ட நன் நகரில்
பானத்துறு மொழியாள் ஒடு பாலாவியின் கரைமேல்
ஏனத்து எயிறு அணிந்தான் திருக்கேதீச்சரத்தானே.

அட்டன் அழகு ஆக அரைதன் மேல் அரவு ஆர்த்து
மட்டு உண்டு வண்டு ஆலும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பட்ட அரி நுதலாள் ஒடு பாலாவியின் கரைமேல
சிட்டன் நமை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே.

மூவர் என, இருவர் என, முக்கண் உடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன், எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே.

கறை ஆர் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன் நகருள்
சிறை ஆர் பொழில் வண்டு யாழ் செயும் கேதீச்சரத்தானை
மறையார்புகழ் ஊரன் அடித் தொண்டன் உரை செய்த
குறையாத் தமிழ் பத்தும் சொலக் கூடா, கொடுவினையே.

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம்



| | |
|---|---|
| இறைவன் திருப்பெயர் | - திருக்கேதீச்சரநாதர், மாதேவன் |
| இறைவியார் திருப்பெயர் | - கௌரியம்மை |
| பண் | - நட்டராகம் |
| திருமுறை | - 2ம் திருமுறை |

திருச்சிற்றம்பலம்

விருது குன்ற, மாமேரு வில், நாண் அரவா, அனல் எரிஅம்பா,
பொருது மூஎயில் செற்றவன் பற்றி நின்று உறை பதி எந்நாளும்
கருதுகின்ற ஊர் கனைகடல் கடி கமழ் பொழில் அணி மாதோட்டம்,
கருத நின்ற கேதீச்சரம் கைதொழ, கடுவினை அடையாவே.

பாடல் வீணையர், பல பல சரிதையர், எருது உகைத்து அரு நட்டம்
ஆடல் பேணுவர், அமரர்கள் வேண்ட நஞ்சு உண்டு இருள் கண்டத்தர்,
ஈடம் ஆவது இருங்கடல் கரையினில் எழில் திகழ் மாதோட்டம்,
கேடு இலாத கேதீச்சரம் தொழுதொழ, கெடும், இடர் வினைதானே.

பெண் ஓர் பாகத்தர், பிறை தவழ் சடையினர், அறை கழல் சிலம்பு ஆர்க்கச்
சுண்ணம் ஆ தரித்து ஆடுவர், பாடுவர், அகம்தொறும் இடு பிச்சைக்கு
உண்ணல் ஆவது ஓர் இச்சையின் உழல்பவர், உயர்தரு மாதோட்டத்து,
அண்ணல், நண்ணு கேதீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே.

பொடி கொள் மேனியர், புலி அதள் அரையினர், விரிதரு கரத்து ஏந்தும்
வடி கொள் மூ இலை வேலினர், நூலினர், மறிகடல் மாதோட்டத்து
அடிகள், ஆ தரித்து இருந்த கேதீச்சரம் பரிந்த சிந்தையர் ஆகி,
முடிகள் சாய்த்து, அடி பேணவல்லார் தம்மேல் மொய்த்து எழும் வினைபோமே.

நல்லர், ஆற்றவும் ஞானம் நன்கு உடையர், தம் அடைந்தவர்க்கு அருள் ஈய
வல்லர், பார் மிசைவான் பிறப்பு இறப்பு இலர், மலி கடல் மாதோட்டத்து
எல்லை இல் புகழ் எந்தை, கேதீச்சரம் இராப்பகல் நினைந்து ஏத்தி,
அல்லல் ஆசு அறுத்து, அரன் அடி இணை தொழும் அன்பர் ஆம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திருமகள் தனைப் பொருந்த வைத்து, ஒருபாகம்
மாழை அங்கயல் கண்ணிபால் அருளிய பொருளினர், குடிவாழ்க்கை
வாழை அம்பொழில் மந்திகள் களிப்பு உற மருவிய மாதோட்ட,
கேழல் வெண்மருப்பு அணிந்த நீள் மார்பர், கேதீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல் உலகினில் உயிர் வாழ்க்கை
கண்ட நாதனார், கடலிடம் கைதொழ, காதலித்து உறை கோயில்
வண்டு பண் செயும் மா மலர்ப்பொழில் மஞ்ஞை நடம் இடு மாதோட்டம்,
தொண்டர் நாள்தொறும் துதிசெய, அருள் செய் கேதீச்சரம் அதுதானே.

தென் இலங்கையர் குலபதி, மலை நலிந்து எடுத்தவன், முடி திண்தோள்
தன் நலம் கெட அடர்த்து, அவற்கு அருள் செய்த தலைவனார் கடல்வாய் அப்
பொன் இலங்கிய முத்து மா மணிகளும் பொருந்திய மாதோட்டத்து,
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு கேதீச்சரத்து உள்ளாரே.

பூ உளானும் அப் பொரு கடல் வண்ணனும், புவி இடந்து எழுந்து ஓடி,
மேவி நாடி, நுன் அடி இணை காண்கிலா வித்தகம் என் ஆகும்?
மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்நகர் மன்னி,
தேவி தன்னொடும் இருந்து கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே!

புத்தராய்ச் சில புனைதுகில் உடையவர், புறன் உரைச் சமணாதர்,
எத்தர் ஆகி நின்று உண்பவர் இயம்பிய ஏழைமை கேளேன்மின்!
மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர், மாதோட்டத்து
அத்தர், மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம் அடைமின்னே!

மாடெலாம் மணமுரசு எனக் கடலினது ஒலிகவர் மாதோட்டத்து
ஆடல் ஏறு உடை அண்ணல் கேதீச்சரத்து அடிகளை, அணி காழி
நாடு உளார்க்கு இறை ஞானசம்பந்தன் சொல் நவின்று எழு பாமாலைப்
பாடல் ஆயின பாடுமின், பத்தர்கள் பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீச்சர அகவல்

## திருக்கேதீச்சரத் திருக்குட நன்னீராட்டை முன்னிட்டு இயற்றப்பட்ட திருக்கேதீச்சர அகவல்



சைவப்புலவர். கவிமாமணி.
சிவசீர்வளர் (சிவஸ்ரீ) பால.
இந்திர சிவாச்சாரியார்,
முதுகலைமானி.
ஒசுத்திரேலியா - சிட்னி.

அருள்மிகு திருக்கேதீச்சரநாதர் - இலங்கை

**காப்பு**

(இருவிகற்ப நேரிசை வெண்பா)

கேதீச்ச ரத்திலே கீர்த்தித் திருவருளை
ஆதீயாய் நின்றே அடியவர்க்கு - நாதீர்க்கத்
தேன்சுவை நாடச் செகத்தினிலே பாலாவி
நான்பாடக் காப்பாயென் நா.

(அகவற்பா)

சீர்வளர் ஈழத் திருவருள் கூடும்
நேர்புகழ் கொண்ட நிறைதலந் தன்னிற்
கெழுகடல் சூழக் கேதீச் சரமாய்
முழுமதி யாகி முன்னொளி தந்தே
தழுவிட வருவான் தரணியில் வந்து
எழுஞா யிறென ஏற்றங் கொண்டே
உலகினைக் காப்பாய் உடனுறை தேவா
மலமதுந் தேயும் மனத்தினில் வாவா
நலமதைத் தாங்கி நாடிடு நீயே
பலனெனத் தருவாய் பாரினில் நின்றே

சோதியாய்க் காணச் சுடரெனத் தோன்றும்
ஆதியாந் தெய்வம் அமரரும் போற்றும்
பாதியாங் கௌரியும் பக்கம் நிற்க
நீதியாய் நன்மை நிலத்தினில் நிற்பாய்
பற்பல தோற்றம் பாரில் ஏற்பாய்
கற்றிடக் கோடி கண்கள் வேண்டும்
சொற்றுணை நன்மா தோட்டத் துறையில்
பெற்றுயர் வாழ்வு பேறாய்க் கொண்டாய்
கேது வழிபடக் கேதீச் சரமாய்
ஓதுந் திருமுறை ஓங்கும் புகழே

மாது கௌரியை மகிழ்வுடன் தாங்கி
ஏது குறையென இலங்கை நிறைவாய்
நன்றே வரமாய் நாடும் அடியவர்
குன்றா வளமாய்க் கூடும் படியே
வென்றிடும் வாழ்வை விரைவாய் அருள
நின்றே ஆடு நிம்மதி யோடு
தென்றல் வீசுஞ் செகமாய்க் காண
உன்றன் பாதம் உலகே தேடுங்
கேதீச் சரரே கேட்கும் வரத்தைக்
கைதீச் சுடலால் களைந்தே விடுவாய்

சிந்தனை செய்யச் சிறக்குஞ் சைவம்
வந்தெதிர் கொள்வாய் வாழ்வினில் நீயே
நில்லா தோடும் நீண்ட வினைகள்
வல்லவ னுன்னால் வரமிகு வழியாம்
சொல்லாஞ் சிவமே சூழும் நன்மை
சொல்வோம் நாளுந் துதித்திட வேண்டும்
அல்லும் பகலும் அன்பரைக் காக்க
நல்வழி யாக நாடிடுந் தெய்வம்
பாலா வியெனும் பதியுறை தீர்த்தம்
காலா காலங் கலியினை அகற்றே

நாலாப் பக்கமும் நாடுவர் அடியவர்
ஆளா யிருந்துநீ ஆண்டிடுங் கடவுள்
தேவா ரத்தாற் றெளிவுறக் காட்டும்
மூவா முதலே முதன்மை இறைவா
சிற்பம் நிறைந்த திருவுரு வங்கள்
கற்பனைக் காட்சி கலையெழிற் கொண்டு
முட்டிடுங் கோபுரம் முன்னொளி வீசப்
பட்டுடை நாயகன் பாதமே காண்போம்
கூடும் அடியவர் குறைகளைத் தீர்க்கும்
ஆடும் ஐயனை அனைவரும் தொழவே

நாவலர் போற்றிய நன்னெறித் தமிழும்
காவலாம் வேதக் கல்விகள் நாளும்
ஆவலாய்க் கற்கும் ஆலயம் இதுவாம்
பாவலர் பாடிடும் பண்முறை ஓங்கும்
தலமென உயர்வாய்த் தரணியிற் போற்ற
மலமதும் நீங்கி மயக்கம் அறுத்து
நிலவுயிர் வாழ நித்தந் துணையாய்
விலகிடா வருவாய் விரைவாய் நீயே
கழல்தொழ வாவா கைலை வாசா
நிழலென வருக நெஞ்சினில் நீண்டே

வன்னி மரமே வடிகொடு இடமாய்
நன்றே யிருக்கும் நாயகன் தாளை
என்றும் ஏற்றி இனியவை பெற்றுக்
குன்றா வளமையுங் கூடும் நிறைவுடன்
அன்றா டமவன் அருளதைப் பெற்று
இன்பத் தமுதினில் இணைந்திட வாழ்வாம்
உன்னடி போற்ற உமையொடு வருவாய்
ஒன்றிடு முள்ளம் உயர்வாய் எண்ண
முன்னோர் ஏற்றும் முறைகளை வழியென
நன்னெறி கண்டு நலமிகு பெறவே

மாண்புறு தெய்வம் மாத்தோட் டத்தில்
வேண்டிட நல்வரம் விரைவினிற் றருவான்
நோயினை அகற்ற நொடியினில் வருவான்
தாயினும் நல்லான் தலைவன் இவனே
வாயினால் துதித்து மனத்தினில் எண்ணக்
கோயிலாய்க் கொண்டான் குவலயந் தன்னில்
சூலம் பிடித்த சுடரொளித் தெய்வங்
காலங் கருதிக் கருணையே புரிவான்
ஞாலம் போற்றும் ஞாயிறு தோன்ற
மூல மாக முன்னிற் பானே

ஈச்சரம் ஐந்தில் ஈசன் நிற்பான்
மூச்சாய் முதல்வனை முறையாய்ப் போற்றிட
அம்புவி கூடி அருளதைப் பேணும்
கும்பமே சூழக் குவியுமாம் கைகள்
நம்பியே நாளும் நாடிட வேண்டும்
தம்மடி யாரைத் தலைமேல் வைப்பான்
பிறைநுதல் அழகினன் பெண்ணாம் பாகன்
நிறையருள் உலகினில் நினைக்கும் ஏகன்
குறையிலாக் குணங்களைக் கொண்ட தேகன்
இறைவனை நெஞ்சினில் இருத்திடு வாயே

வெண்மதி நாளும் விரைமுகில் நாடிக்
கண்பட வருமாங் கருவிழி காண
எண்ணமும் உன்றன் ஏற்றுயர் கொடியாம்
மண்ணுயர் நந்தி மகிழ்வுற நாட்டி
விண்ணவர் பூமலர் மின்னலாய் வீசத்
தொண்டரும் நாவினால் சுந்தர மொழியால்
வண்டென வந்து வழிபட நாளும்
கண்டுடன் வந்து கனவுகள் நனவாய்ச்
சான்றவ ரெல்லாஞ் சார்ந்திட முன்னே
தோன்றிடு நீயே துணையாய் நன்றே

சிவனே போற்றி சிறப்பே யருளத்
தவமே நிற்குந் தலைவன் தாளே
குவலயம் அன்பாய்க் கூடிட வருவாய்
நுவலும் வாழ்வில் நோற்குந் தேவாய்
பாபம் அகற்றப் பரமன் உனையே
தூபங் காட்டித் தொழுவோம் நன்றே
வருக கேதீச் சரரே உமையுடன்
தருக நலத்தைத் தரணியில் நின்றே

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில் மற்றும் செந்தமிழ் ஆகம சிவமடம்

**தென்னாடு:**

தென்னாடு என்பது கடல்கொண்ட தென்னாடு என்று அறியப்படும் நாற்பத்து ஒன்பது நாடுகளைக் கொண்ட தமிழரின் பண்பாடு,மொழி,வாழ்வியல் ஆகமம்,அறிவியல், தொழில்நுட்பம், வானியல், உலகியல் என்று உலக நாகரிகத்திற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்த ஆதித் தமிழர் நிலப்பரப்பின் அடையாளம்.

**அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி**
**வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு**
**தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி - (சிலப். 11:17-22)**

**மன்னு மாமலை மகேந்திரம் அதனில்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் - (கீர்த்தித் திருஅகவல் வரி 10)**

மகேந்திரமலை என்பது கபாடபுரத்தருகே இருந்ததாக வான்மீகி முனிவர் தான் எழுதிய இராமாயணத்தில் குறிப்பிடுகிறார். இந்த கபாடபுரமும் தென்னாட்டின் ஒரு பகுதியே.

**பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல்**
**உலகினில் உயிர் வாழ்க்கை - திருக்கேதீச்சரத் திருப்பதிகம்**

**அன்றாலின் நிழல்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து - சுந்தரர் தேவாரம்**

**நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழ் இருந்தங்கு அறம் உரைத்தான் காணேடீ - திருவாசகம்**

இப்படிபட்ட எங்கள் பண்பாட்டின் ஆதியினையும் அடையாளத்தினையும் ஒரு சிற்றுருவாக்கப்பட்ட வடிவமாக காட்டும் நோக்குடன், கடல்கொண்ட தென்னாட்டின் கடலுக்கருகில் உள்ள சிவபூமியாம் இலங்கைத் தீவினில் உருவாக்கப்பட்டதே இந்தத் ”தென்னாடு” அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில் மற்றும் செந்தமிழ் ஆகம சிவமடமும் ஆகும்.

**தென்னாட்டிலே,**

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் பரந்தவனும்,**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தவனும்,**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தவனும்,**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தவனும்,**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தவனும்,**
**அருக்கனில் சோதி அமைத்தவனும்,**
**வெண்மதி தண்ணொளி தந்தவனும்,**
**உயிருக்குள் உயிராய் நிற்கின்றவனும்,**
**ஆதியும் அந்தமும் இல்லாதவனும்,**
**அரும்பெரும் சோதியாக திகழ்கின்றவானுமாகிய,**

தென்னாடுடைய சிவனை, ஐம்பூதநாதாராக கல்லாலமரத்தின் கீழ் எழுந்தருளச் செய்து, மேலே குறிப்பிட்டது போல் நால் வேதங்களும் அவற்றுக்குத் துணையாக நிற்கும் ஆகமங்களும் எங்கே தோன்றினவோ, அந்த சிற்றுருமாதிரி இடமாகிய இந்தத் தென்னாட்டில் அந்த செந்தமிழ் வேதங்கள் மற்றும் செந்தமிழ் ஆகம முறைப்படி இறைவனின் திருச்செவிகள் குளிரும் வண்ணம் வழிபாடு நடைபெற வேண்டும் என்ற திருவருளின் எண்ணப்பாட்டிற்கு வடிவம் கொடுத்து எழுப்பப்படுகின்ற திருக்கோயிலே தென்னாடு.தென்னாட்டில் தலமரமாக கல்லாலமரமும், தீர்த்தமாக பஃறுளித் தீர்த்தமும் விளங்கும். அத்துடன் ஆலமர் செல்வரும் அவரிடம் அறம் பயின்ற முனிவர்களின் சிலைகளும் நிறுவப்பட உள்ளன.

அப்பர் பெருமான், **“நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தரு மிக்கு அருளினோன் காண்”** என்று சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். மாணிக்க வாசகப் பெருமான் திருக்கோவையாரில், **”சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீண்தமிழ்”** என்று பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் திருப்பாசுரத்தில் **”அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்”** என்று கூறியுள்ளார். அதனை தெய்வசேக்கிழார் அவர்கள் **”கூடல் மாநகரத்துச் சங்கம் வைத்தவன்”** என்று பாடியுள்ளார். பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடல் புராணத்தில், **“கண்ணுதல் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்“** என்று பாடியுள்ளார். இவை எல்லாவற்றையும் உற்று நோக்கினால் எம்பெருமானே முன்னின்று சங்கம் வளர்த்து தமிழ் ஆய்ந்தார் என்பது கண்கூடாகிறது.

அதன் அடிப்படையில், கண்ணுதற்பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்தமிழின் முதற் சங்கமாகிய தென்மதுரை மற்றும் இடைச் சங்கமாகிய கபாடபுரம் நினைவாக கற்றளிச் சங்கக் கூடங்களும் அமைக்கப்ப உள்ளன. தமிழரின் வரலாற்று நீட்சியைப் பிரதிபலிக்கும் ஒரு அடையாளக் கோயிலாக தென்னாடு திகழும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் நாயன்மார்கள், சந்தானக் குரவர்கள், சித்தர்கள் மற்றும் ஈழத்துச் சித்தர்கள் சிலைகளும் வைக்கப் படும். மேலும் திருமுறைக் கோயிலும் உருவாக்கப்பட்டுத் திருமுறைகள் பூசையில் வைத்து வணங்கப்படும்.

**தென்னவன் பார்த்தீபன்**
**நிறுவுனர் - தென்னாடு**




# தென்னாடு ஐம்பூதநாதருக்கு சங்கு நீராட்டு

திருமூலரால் சிவபூமி என்று புகழப்படும் இலங்கையில், ஆதி சிவபத்தரான இராவணன் காலத்தில் இருந்தே சிவவழிபாடானது மேலோங்கி இருந்த நிலையில், அடியார்கள் தாமாகவே தெய்வத்தமிழில் இறைவனை, பூசனை செய்து வழிபட்டு வந்துள்ளனர்.

அந்தவகையில், பழந்தமிழரின் மரபையும் வரலாற்றயும் ஆவணப்படுத்தும் நோக்கோடு, ‘தென்னாடு’ என்ற தனிப்பெரும் பெயரோடு, ஈழத்திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாணம் கொக்குவில் பதியில், முதலாம் தமிழ் சங்கம் கண்ட முழுமுதற் கடவுளாகிய சிவனை, சித்தர்களின் தவக்கோலங்கள் சூழ, ஐம்பெரும் பூதங்களையும் உள்ளடக்கிய ஐம்பூதநாதராக அருட்கோலம் கொண்டு, ஏற்றத்தாழ்வு முறைமை அற்று அனைவரும் வழிபடக்கூடிய சிவ மடம் மற்றும் திருக்கோயிலாக தென்னாடு கடந்த இரண்டு வருடங்களாக இயங்கிவருகின்றது.

அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு, இரண்டு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித்திங்கள் இருபத்தெட்டாம் நாள் (11-06-2022) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு மிகவும் சிறப்பாக நடை பெற்றது.









# எங்கள் ஊருக்கு பெயர் கொடுத்த வேழமுகத்தவனின் தேர்த்திருவிழா ஆனித் திங்கள் இருபத்தொராம் நாள் (05.07.2022)



நெடுஞ்சாலையில் மேற்கு நோக்கி அமைந்துள்ள தாகவும், பூநகரிப் பிரதேசத்தில் கொடித்தம்பத்துடன் பெருந்திருவிழா எடுத்து, சித்திரத்தேர் வீதிவலம் நடைபெறும் ஒரேயொரு சிறப்புவாய்ந்த ஆலயமாக காணப்படுகின்றது. பிரசித்திபெற்ற ஐம்பெரும் ஈச்சரங்களில் ஒன்றான திருகேதீச்சரம் சென்று வரும் அடியவர்களின் முதல் வணக்கத்துக்குரிய ஆலயமாக திகழ்வதுடன், சிவனிரவு காலப்பகுதியில் திருக்கேதீச்சரம் சென்று வரும் அடியவர்களின் விரதத்தை பூர்த்திசெய்யும் பொருட்டு, வருடந்தோறும் அடியார்களுக்கு அமுது செய்விக்கும் அளப்பரிய பணியை ஆற்றிவருகின்றமையும் ஆலயத்தின் தனித்துவச் சிறப்பை காட்டி நிற்கின்றது.

சிவபூமியாம் இலங்கையின் வடக்கே நீர்வளமும் நிலவளமும் என பொழிவுற்று திகழும் கிளிநொச்சி மாவட்டத்தில், பூநகரி பிரதேசத்தில் A32 நெடுஞ்சாலையில் சோலைகளால் நிறைந்த நீர்வளம் மற்றும் நிலவளத்துடன் அனைத்து மக்களும் சாதி பேதமின்றி மிக ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் முழங்காவில் பதியிலே வீற்றிருக்கும் அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகரின் அருட் சிறப்பு மற்றும் ஆலய வரலாறு என்பன பழந்தமிழர் வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இவ்வாலயம் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது ஆலயம் அமைந்திருக்கும் வட கிழக்கு மூலையில் ஓர் பெரிய புளியமரம் நின்றதாகவும் அவ்வழியே விவசாயத்தின் பொருட்டு சென்று வரும் வழிப்போக்கர்கள் தமக்கு வழிபாட்டுத் தெய்வம் ஒன்று தேவையெனக் கருதி கல் ஒன்றை பிள்ளையாராகக் கருதி புளியமரத்தடியில் நிறுவி தமது கோரிக்கைகைள முன் வைத்து கற்பூரம் ஏற்றி தமது பயணத்தை மேற்கொண்டு வெற்றிகண்டார்கள் என்பதும் செவி வழியாக அறிந்த உண்மை.

போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட வாடி வீடு, சமையலறை மடங்கள் மற்றும் குதிரை லயம் என்பன முழங்காவில் பகுதியில் மக்கள் குடியேற்றப்பட்ட காலப்பகுதியில் அழிவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இதிலிருந்து இவ்வாலயம் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந்தே வழிபட்ட தலமாக சிறப்பு வாய்ந்ததாகவும் கொள்ளப்படுகிறது. புளியமரத்தடியின் கீழ் நிறுவிய கல்லுப் பிள்ளையாரை அண்டிய பகுதியில் மக்கள் தமது போக்குவரத்துக்கு ஒற்றையடிப் பாதையை நிறுவியதாகவும் இதனாலேயே இவ்வாலயம் மேற்குதிசையை நோக்கிய வாறு நெஞ்சாலைக்கருகில் அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது. அதுமாத்திரமன்றி ஆதிகால மக்களால் வழிபட்ட பிள்ளையார் இன்றும் ஆலயத்தின் முன்பகுதியில் வைத்து ஆதரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத் தேவைக்கும் பிரதேச வாசிகளின் குடிநீர்த் தேவையைக் கருத்திற் கொண்டும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஆலயத்தின் அருகில் கிணறு வெட்டியதாகவும் வெட்டப்பட்ட கிணற்றில் நீர் இல்லாமையால் கவலையடைந்து மக்களும் பூசகரும் இறைவனிடம் வேண்டியதாகவும், அன்று நடுநள்ளிரவில் மின்னாமல் முழங்காமல் அக்கிணற்றில் இடி விழுந்து நீர் ஆறாகப் பெருகியது போல, உறங்கிய பூசகர் கனவு கண்டு சென்று பார்த்த போது கிணற்றிலே நன்னீர் கண்டு ஆனந்தமடைந்து, அந்நீரை எடுத்து பிள்ளையாருக்கு திருமஞ்சனம் செய்ததாகவும் அறிய முடிகிறது. மின்னாமல் முழங்காமல் இடி விழுந்த இந்த ஊற்று, முடிவில்லா அருள் தரும் தீர்த்த ஊற்றாக அன்றிலிருந்து இன்றுவரை விநாயகரின் திருமஞ்சன வழிபாடுகளுக்கும் மக்களின் குடிநீர் தேவைக்கான நன்னீராகவும் வற்றாத பழமை வாய்ந்த தீர்த்தமாகவும் காணப்பட்டு வருகின்றது.

மின்னாமல் முழங்காமல் இடிவிழுந்து கிணற்றிலே நீர் தோற்றம் பெற்றமையாலேயே அதுவரை காலம் விநாயகபுரம் என்று பழமைப் பெயர்கொண்டு அழைக்கப்பட்ட இப்பகுதி ‘முழங்காவில்’ எனும் காரணப் பெயர்பெற்றதாக அறிய முடிகிறது. இதனாலே இத்திருக்கோயில் முழங்காவில் பிள்ளையார் கோயில் என அனைவராலும் அழைக்கப் படுகிறது.



சிவத்திரு.
தென்னாடு நிலவன்

1970ம் ஆண்டு வரை மடாலயமாக இருந்த இக்கோயில் திருக்கேதீச்சர ஆலயப் பரிபாலன சபையினரின் தலையீட்டில் ஆகம வீதிகளுக்கு உட்படுத்தி, சிவத்திரு. வேலாயுதர் சண்முகசுவாமியார் பூசகராகப் பொறுப்பேற்று வழிபாடாற்றினார். ஆலயத்தின் முதல் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட வேளையில் பல்லவராயன்கட்டைச் சேர்ந்த சிவத்திரு. கார்த்திகேசு அவர்கள் தலைமைப் பொறுப்பையேற்றுக் கொண்டார்.

1964, 1965 காலப்பகுதியில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்காக முழங்காவில் பிரதேசம் அரசால் குடியேற்றத் திட்டமாக சிபாரிசு செய்யப்பட்டு காடுகள் வெட்டித் துப்பரவு செய்யப்பட்ட நிலையில் இத்திட்டம் வெற்றியளிக்காத காரணத்தினால், 1970 காலப்பகுதியில் படித்த வாலிபர் திட்டத்திற்கு 2 ஏக்கரும் கூட்டுப்பண்ணைத் திட்டத்திற்கு 1 ஏக்கரும் என குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இக்குடியேற்றத் திட்டத்தைத் தொடர்ந்து முதன் முதலாக இக்கோயிலுக்கு பொன்னாவழி அருளம்பலம் உடையார், அரசாங்க அதிபர் திரு. ஆ. சிறிகாந்தா மற்றும் அரச நிதியுடவியுடனும் ஊர்மக்களின் கடும் உழைப்பினாலும் கருவறை எழுப்பப்பட்டு ஆலயம் உருப்பெற்றதாக அறிய முடிகின்றது.

இக்கோயில் முதன்முதலாக, நிர்வாகத் தலைவர் சிவத்திரு. கந்தசாமி தலைமையில் சக உறுப்பினர் மற்றும் ஊர்மக்களின் அனுசரணையுடன் திருக்குடமுழுக்கு நடைபெற்றது. இரண்டாவது குடமுழுக்கு அமரர் சிவத்திரு. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் உறுப்பினர்கள் மக்கள் அனைவரும் ஒன்று கூடி சிறப்பாக நடைபெற்றது. மூன்றாவது குடமுழுக்கு சிவத்திரு.இ. நவரட்ணசிங்கம் அவர்கள் தலைவராக இருந்த காலப்பகுதியில் அனைவரின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. நான்காவது குடமுழுக்கானது நாட்டுச்



சூழல் காரணமாக காலதாமதமாகி, தலைவர் திரு.மு.நவரட்ணம் தலைமையில் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் ஊர்மக்களின் கடும் உழைப்பின் மூலம் 2012ம் ஆண்டு புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அழகிய கட்டடங்களும், சிற்பங்களும் செதுக்கப்பட்டு புதுப்பொலிவுடன் குடநீராட்டு, சங்குநீராட்டு என வெகுசிறப்பாக செய்யப்பட்டது.

முதலாவது குடமுழுக்கை அண்டிய ஓரிரு நாட்களுக்கு முன்பு விநாயகருக்கு பூசை செய்து வழிபாட்டை முடித்துக் கொண்டு புறப்பட்ட பூசகர் வேலாயுதர் சண்முகம் அவர்கள் “கூண்டோடு கைலாசம் சென்றார்” என்ற முன்னோர் வாக்கிற்கிணங்க மீண்டும் திரும்பி வரவில்லை என்பதுடன் அவரின் உடலானது மக்களால் எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து தன்னை நம்பி மிக பத்தியுடன் வழிபடும் அடியவர்களுக்கு முழங்காவில் அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகர் அருளை வாரி வழங்குவது மட்டுமல்லாமல் அடியவர்களை ஆட்கொண்டு அருள்வார் என்பது மக்களின் அதீத நம்பிக்கை ஆகும்.

இத்திருக்கோயில் பெருந்திருவிழாவானது ஆனித் திங்கள் சகடு (உரோகிணி) நாண்மீன் நன்னாளில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தாம் நாள் தேர்த்திருவிழாவும் பதினொராம் நாளாகிய ஆனிஉத்தர நன்னாளில் தீர்த்தத்திருவிழாவும் என பதினோரு நாட்கள் சிறந்த முறையில் கிரியைகள், வேள்விகள், மாம்பழத்திருவிழா, வேட்டைத் திருவிழா போன்றன இடம்பெற்று பதினொராம் நாள் மாலை கொடியிறக்கத்துடன் நிறைவடையும். இதில் தீர்த்தத்திருவிழாவே சிறப்பு பெற்றது. இறைவன் அருளால் ஆன தீர்த்தக்கிணற்றில் விநாயகப் பெருமான் தீர்த்தமாடிய பின்னர், சிறியோர் முதல் பெரியோர் வரை அத்தீர்த்தத்தை தெளித்து மகிழ்வர்.

இத்தகைய சிறப்புடைய இவ்வாலயத்தில் தற்போதைய பூசகராக சீர்வளர்சீர் (பிரம்மஸ்ரீ) ஆ.மிதுலான் சர்மா அவர்கள் சிறப்பாக பூசனைகள் செய்து வருகின்றார். தற்போதைய நிர்வாகவும் இளம் சைவத் தொண்டர்களுக்கு இடமளிக்கும் நோக்கோடு இளம் தலைமுறையினரையும் நிர்வாகத்தில் இணைத்துள்ளது. இவர்களுடைய ஏற்பட்டிலேயே, கடந்த 10.04.2022 அன்று, பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளைத் தம்பிரான் திருஞானசம்பந்த சுவாமிகள், தெய்வத்தமிழ் பற்றாளர் - இறைநெறி இமையவன் ஐயா (திருக்குடந்தை தெய்வத்தமிழ் திருக்கூடல்), தென்னாடு செந்தமிழாகம சிவமட நிறுவுனர் திருவம்பலம் தென்னவன் ஆகியோர் வருகை தந்து வரலாற்றுப்பதிவு ஒன்றை ஏற்படுத்தி இருந்தனர். இந்நிகழ்வு தென்னாடு இதழிலும் பதிவாக்கப்பட்டிருந்தது.

குளங்கரை ஓரம் தன்னில் கோயில் கொண்டு, கரம் பற்றி தொழுவோரின் ஊழ்வினைகள் அறுக்கும் அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகர் தன்னை நம்பி வழிபடும் அடியவர்களுக்கு அருளை வழங்கும் குணம் இன்றும் குறையாமல் புதுப்பொலிவுடன் தன்னையும் தன் கிராமத்தையும் அழகு படுத்துகின்றார் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை.

இப்படி பல சிறப்புமிக்க செல்வயோக சித்தி விநாயகர் அருளும் மண்ணில் இந்தியாவின் பழம்பெரும் ஆதீனங்களின் திருவடிகளை பதித்து மேலும் சிறப்பாக்கியுள்ளனர். இத்தகை பதியில் கட்டாயம் ஓர் சிவ வழிபாட்டுத்தலம் நிறுவப்பட வேண்டும். மாணவர்கள், சிவனடியார்கள், திருக்கேதீச்சர யாத்திரை செல்வோர்கள் நீர் ஊற்றி வழிபாடு ஆற்றுவதற்கு ஏதுவாக சிவனாலயம் கட்டாயமாக நிலைபெற, கேட்டவருக்கு கேட்ட வரம் அருளும் அருள்மிகு செல்வயோக சித்தி விநாகயப் பெருமான் திருவருள் கைகூடட்டும்.

இவ்வருடமும் அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகப் பெருமானின் பெருந்திருவிழாவானது, சீர்வளர்சீர்(சிவஸ்ரீ) செல்வ ஷர்மிலக் குருக்கள் தலைமையில் ஆனித் திங்கள் பதினொராம் நாள் (25.06.2022) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆனித் திங்கள் இருபத்தொராம் நாள் (05.07.2022) தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆனி உத்தர நன்னாளில் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெற்று, அடுத்தநாள் பூங்காவனம், மறுநாள் சங்கு நீராட்டு (சங்காபிஷேகம்), மறுநாள் வைரவர் மடையும் இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


திருச்சிற்றம்பலம்

தகவல்கள் - பரதன் ஆசிரியர் (முன்னாள் ஆலய நிர்வாக உறுப்பினர்),
தி. வசீகரன் (தற்போதைய ஆலய நிர்வாக செயலாளர்),
கிளி / முழங்காவில் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா மலர்.
படங்கள் - உதயராசா நிலைக்சன்
தொகுப்பு - சிவத்திரு. தென்னாடு நிலவன்

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆனி நிறைமதிப் பூசை (15-06-2022)



திருஞானசம்பந்தர் குருபூசை நாள் (18-05-2022)



சேக்கிழார் குருபூசை (04-06-2022)



சிவதீக்கை (விசேடம்) வழங்கல் (19-06-2022)



தருமை ஆதீன மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகளுடனான சந்திப்பு (16-06-2022)



வைகாசி தென்னாடு இதழ் வெளியீடும் தேய்பிறை கழுவாய் வழிபாடும் (27-05-2022)



வைகாசி வளர்பிறை கழுவாய் வழிபாடு (12-06-2022)



வைகாசி நிறைமதி (15-05-2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்தோராவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 12ம் நாள், பதின்மும்மை பிறைநாள் அன்று (26-06-2022 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org